செ.வெ. எண்: 7 நாள்: 03.01.2012

# செய்தி வெளியீடு

டிசம்பர் 18 ஆம் தேதி அன்று தஞ்சாவூர் மாவட்டம் புதுப்பட்டினத்திலிருந்து 5 மீனவர்கள் சென்ற ஒரு படகு, புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்திருந்து 4 மீனவர்கள் சென்ற ஒரு படகு, 19 ஆம் தேதியன்று கோட்டைப்பட்டினத்திலிருந்து 3 மீனவர்கள் சென்ற ஒரு படகு, ஜெகதாப்பட்டினத்திலிருந்து 6 மீனவர்கள் சென்ற ஒரு படகு, 4 மீனவர்கள் சென்ற ஒரு படகு, 5 மீனவர்கள் சென்ற ஒரு படகு, 20-ஆம்தேதி அன்று நாகப்பட்டினத்திலிருந்து 6 மீனவர்கள் சென்ற ஒரு படகு, 22-ஆம் தேதி அன்று ஜெகதாம்பட்டினத்திலிருந்து 1 மீனவர் சென்ற ஒரு படகு, 29–ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினத்திலிருந்து 6 மீனவர்கள் சென்ற 2 படகுகள் என மொத்தம் 10 படகுகளில் சென்ற 40 மீனவர்கள் மோசமான பருவநிலை காரணமாக காற்றின் வேகத்தால், படகுகள் சேதமடைந்து இலங்கை கடற்கரைப் பகுதியில் உள்ள Delft தீவு, அனலைத்தீவு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள கரையோரம் ஒதுங்கியுள்ளனர்.

இதில் தஞ்சாவூர் புதுப்பட்டினத்திலிருந்து 5 மீனவர்கள் சென்ற படகு இலங்கையிலுள்ள அனலைத்தீவுக்கு அருகே தண்ணீரில் முழ்கியதில் ஒருவர் மட்டும் காப்பாற்றப்பட்டு இராமேஸ்வரம் கொண்டுவரப்பட்டுள்ளார். ஒரு மீனவர் கடலில் முழ்கிவிட்டதாக அஞ்சப்படுகிறது.. எஞ்சிய 3 மீனவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

மீதமுள்ள 9 படகுகளில் உள்ள 35 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அருகிலுள்ள காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இதில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 23 மீனவர்களும், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 6 மீனவர்களும், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 6 மீனவர்களும் அடங்குவர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்திரவின்பேரில், தமிழக அரசு இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் மத்திய அரசின் வெளியுறவுத்துறை ஆகியவற்றை அணுகி எடுத்த தொடர் நடவடிக்கையின் விளைவாக இலங்கை காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட 35 மீனவர்களும் எந்தவிதமான நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படாமல் இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட மீனவர்களை இந்திய கடலோரக் காவல்படையின் உதவியுடன் தமிழகத்திற்கு கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தமிழக அரசால் செய்யப்பட்டன.

இதனிடையில், வங்கக்கடலில் உருவான புயல் காரணமாக பருவநிலை மோசமடைந்ததால், அவர்களை உடனடியாக தமிழகத்திற்கு அழைத்து வருவதில் தாமதம் ஏற்பட்டது. பருவநிலை சீரடைந்தவுடன், இலங்கையில் இருந்த 35 மீனவர்கள் இந்திய கடலோரக் காவல்படையினர் உதவியுடன் தமிழகத்திற்கு இன்று (3.1.2012) அழைத்து வரப்பட்டனர். இவர்கள் இன்று மாலை மண்டபம் வந்து சேர்ந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக 35 மீனவர்களும் இன்று (3.1.2012) தமிழகம் திரும்பினர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
நாள்: 3.1.2012